148

056571

## சிறுசேமிப்பு ஆணையரகம், சென்னை-600 002

அனுப்புநர்

டாக்டர். பு. உமாநாத், இ.ஆ.ப.,
ஆணையர், (பொறுப்பு)
சிறுசேமிப்பு ஆணையரகம்,
எண்.735, அண்ணா சாலை,
சென்னை-600 002.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்,
கல்லூரி சாலை, சென்னை - 600006

13 OCT 2021

ந.க. எண். சி1 / 2422 / 2021 நாள்: 08.10.2021

அய்யா,

பொருள்: சிறுசேமிப்பு - 2021-22 ஆம் ஆண்டின் உலக சிக்கன நாள் விழா-30.10.2021 அன்று கொண்டாடுதல் - பள்ளி மாணவ / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தி போட்டிகள் நடத்துதல் - குறித்து.

பார்வை: அரசாணை (வாலாயம்) எண் 646, நிதி (சிறுசேமிப்பு)த் துறை, நாள் 06.10.2021.

*******

பார்வையில் காணும் அரசாணையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. "**உலக சிக்கன நாள் விழா**", ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30 ஆம் தேதி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டும் "உலக சிக்கன நாள்" விழாவை சிறப்பாக கொண்டாடுமாறு அரசு, பார்வையில் காணும் அரசாணையின் வாயிலாக அறிவுறுத்தியுள்ளது.

2. ஒவ்வொரு ஆண்டும் உலக சிக்கன நாளை முன்னிட்டு பள்ளி மாணவ / மாணவியர்களிடையே "சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பிணை" வளர்த்திடும் பொருட்டு, அதன் ஒரு நிகழ்வாக, (1) கட்டுரைப்போட்டி (2) நாடகப்போட்டி (3) நடனப்போட்டி (4) பேச்சுப்போட்டி போன்ற கலை நிகழ்ச்சிகள் மாவட்ட அளவில் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது என்பதை தாங்கள் அறிவீர்கள்,

3, இந்த நிதி ஆண்டான 2021-2022ல் கொரோனா நோய் கிருமி தொற்றின் காரணமாக மாணவர்களின் நலன் கருதியும் சமுக இடைவெளியை பேணிக்காத்திடும் வண்ணம், பள்ளி மாணவர்களிடையே நாடகம் மற்றும் நடனப் போட்டிகளுக்கு பதிலாக உலக சிக்கன நாளை முன்னிட்டு கீழ்கண்ட போட்டிகளை ஆன்லைன் முலமாகவோ அல்லது சமுக இடைவெளியுடனோவோ நடத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. .

1, கட்டுரைப் போட்டி
2, கவிதைப் போட்டி
3. சிறுசேமிப்பு குறித்த சொற்றொடர்கள்
( Slogans on Small Savings or Quotable words on Small Savings)
4. சிறுசேமிப்பு குறித்த வினாடி வினா./ பேச்சுப் போட்டி

3. எனவே, பார்வையில் காணும் அரசாணையின்படி, நடப்பு நிதியாண்டான 2021 -22ல், "உலக சிக்கன நாளை" முன்னிட்டு பள்ளி மாணவ / மாணவியர்களிடையே மேற்காணும் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு, மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும், மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, சென்னையில் நடைபெறும், உலக சிக்கன நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில், மேற்காணும் கலை நிகழ்ச்சிகள் அனைத்து மாவட்டங்களில் நடத்திட முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கிடவும், நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான உலக சிக்கன நாள் விழாவில், சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தும் வண்ணம் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தி தந்திடவும், முதன்மை கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலர் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவில் முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு, உலக சிக்கன நாளான 30.10.2021 அன்றோ அல்லது ஊரடங்கு மற்றும் கொரோனா நோய் கிருமி தொற்றின் காரணமாக மாணவர்களின் நலன் கருதியும் பள்ளிகூடங்கள் மற்றும் ஆசிரியர்களின் வசதி வாய்ப்பினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட உலக சிக்கன நாளின் நிணைவாக அணைவருக்கும் வசதிபடும் பிரிதொரு நாளிலோ பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும் எனவும், மாவட்டங்களில், பள்ளி மாணவ / மாணவியர்களிடையே மேற்கண்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னையில் மேற்கண்ட நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலை, சென்னை மாநகராட்சி உதவி இயக்குநர் (சிறுசேமிப்பு) அவர்களுக்கும், அனுப்பி வைக்குமாறு, முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட, நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

4. உலக சிக்கன நாள் 30.10.2021, நிகழ்ச்சி தொடர்பாக மாவட்டங்களில் பணியாற்றும், சிறுசேமிப்பு உதவி இயக்குநர்கள், முதன்மை கல்வி அலுவலரை நேரில் தொடர்பு கொண்டு, இப்பணியை ஒருங்கிணைப்பார்கள் என்றும், அவர்களுக்கு

தக்க ஒத்துழைப்பினை நல்கிட, தகுந்த அறிவுரைகள் வழங்குமாறும் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/- பு. உமாநாத்
ஆணையர்

/உண்மை நகல்/
உதவி இயக்குநர்
12.10.21

நகல்:

1. ஆணையர், சென்னை மாநகராட்சி,சென்னை-600 003
2. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனைத்து மாவட்டம்
3. உதவி இயக்குநர், (சிறுசேமிப்பு), புதுப்பேட்டை, சென்னை-600 002
4. அனைத்துமாவட்ட மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்(சிறுசேமிப்பு)
5. முதன்மை கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்

- நகல் அனுப்பப்படுகிறது -

ந.க. எண்: 056571/எம்/இ1/2021 நாள்: 25.10.2021

நகல் தக்க நடவடிக்கைக்காகவும் தகவலுக்காகவும் அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது. "அவசரம்" / "தனிக்கவனம்"

இணைப்பு: அரசாணை நகல்

25/10/21
இணை இயக்குநர் (தொ.க.)

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

25/10/21

**சுருக்கம்**

சிறுசேமிப்புத் துறை - உலக சிக்கன நாள் குறித்த விழா – ஆணையரகம் உட்பட அனைத்து மாவட்டங்களில் நடத்துதல் – 2021-2022 ஆம் ஆண்டுக்கான செலவினத் தொகை ரூ. 3,30,000/- வரவு-செலவு நிதியொதுக்கத்திலிருந்து செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நிதி (சிறுசேமிப்பு)த் துறை**

அரசாணை (வாலாயம்) எண். 646

நாள்: 06.10.2021
பிலவ, புரட்டாசி – 20
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

சிறுசேமிப்புத் துறை ஆணையர், சென்னை-2 அவர்களின் கடித ந.க.எண்.சி1/2422/2021, நாள்:27.08.2021

•••••

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட சிறுசேமிப்புத் துறை ஆணையர், சென்னை-2 அவர்களின் கடிதத்தில், 30.10.2021 அன்று அனைத்து மாவட்டங்களிலும் உலக சிக்கன நாள் குறித்த விழாவினை சிறப்பாக கொண்டாட இருப்பதாகவும், பள்ளி மாணவ/மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை வளர்த்திட கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், பரிசுகள் வழங்கவும், சிறுசேமிப்புத் துறையின் வரவு-செலவு நிதியொதுக்கத்திலிருந்து, செலவினம் மேற்கொள்ள பின்வரும் "விளம்பரமும் – பிரச்சாரமும் – விளம்பரக் கட்டணங்கள்" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் ரூ.3,30,000/- நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. சிறுசேமிப்புத் துறை ஆணையரின் கருத்துரு அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, 30.10.2021 அன்று ஆணையரகம், பெருநகர சென்னை மாநகராட்சி சிறுசேமிப்பு பிரிவு மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மேலே பத்தி 1-ல் கூறப்பட்டுள்ளவாறு உலக சிக்கன நாள் குறித்த விழா கொண்டாடுவதற்கு ஏதுவாக ரூ.3,30,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) பின்வருமாறு வரவு-செலவு (2021-22) நிதியொதுக்கத்திலிருந்து செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

| வ.எண். | துறை | செலவினத் தொகை (2021-2022) (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஆணையரகம் | ரூ. 10,000/- |
| 2 | சென்னை மாநகராட்சி | ரூ. 10,000/- |
| 3 | 31 மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) | ரூ.3,10,000/- |
| | மொத்தம் | ரூ.3,30,000/- |

3. மேற்படி, பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத் தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>**சிறுசேமிப்பு இயக்ககம் (016 04)**</u>

"2047-00 ஏனைய வரிவிதிப்புப் பணிகள் – 103 சிறுசேமிப்பை ஊக்குவித்தல் – மாநிலச் செலவினங்கள் – AD பிரச்சாரம் – 308 விளம்பரமும் பிரச்சாரமும் -01 – விளம்பரக் கட்டணங்கள்.

(IFHRMS த.தொ.கு.2047-00-103-AD-30801)

4. மேலே, பத்தி 2-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினைத் தொகையினை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி-1, பிரிவு-99-ன் கீழ், தற்காலிக முன்பணமாக பெறுவதற்கு, சிறுசேமிப்புத் துறை ஆணையர், அனைத்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) மற்றும் சென்னை மாநகராட்சி சிறுசேமிப்பு உதவி இயக்குநர் ஆகியோருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இத்தொகையை உரிய பட்டியல்கள் மூலம் நடப்பு நிதியாண்டிற்குள்ளாக சரிகட்ட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

ஆணையர், சிறுசேமிப்புத் துறை, சென்னை-2.
முதன்மைக் கணக்காயர் (A&E), சென்னை-18.
முதன்மைக் கணக்காயர் (தணிக்கை) சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

**நகல்**

நிதி(பொது)த் துறை, சென்னை-9.
சார் சம்பளக் கணக்கு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/10/2021
பிரிவு அலுவலர்